Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

16.5.2026
ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.
(உலக நீர் தினம் 2026)

**ஆக்ககர நீர் பயன்பாடு : "பினாங்கில் நீர் விநியோகமும் பயன்பாட்டின் கட்டுப்பாடும் சம அளவு முக்கியம்"**

- **பினாங்கு ஒரு நீர் பற்றாக்குறை மாநிலமாக இருந்தும், 2025ஆம் ஆண்டில் தனிநபர் வீட்டு நீர் பயன்பாடு நாளொன்றுக்கு 267 லிட்டராக உள்ளது. இது நாட்டிலேயே அதிக அளவுகளில் ஒன்றாகும்.**
- **மத்திய மற்றும் மாநில அரசாங்கம், மற்றும் PBAPP முக்கிய நீர் திட்டங்களை மேற்கொண்டு வரும் நிலையில், இல்ல நீர் பயனீட்டாளர்கள் வீட்டில் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும்.**

பினாங்கு, சனிக்கிழமை, 16 மே 2026: பருவநிலை மாற்றத்தின் சூழலில், முக்கிய நீர் திட்டங்கள் நிறைவடையும் வரை நீர் இருப்பை உறுதிசெய்ய, பினாங்கு இல்ல பயனீட்டாளர்கள் "ஆக்ககர நீர் பயன்பாட்டை" செயல்படுத்த வேண்டும்.

ஆக்ககர நீர் பயன்பாட்டை அமல்படுத்துவது என்பது, பினாங்கின் நீர் நெருக்கடி நிலையை அறிந்திருப்பது, இல்ல நீர் பயன்பாட்டில் கவனம் செலுத்துவது, மற்றும் மிக முக்கியமாக: வீட்டில் நீர் பயன்பாட்டைக் குறைக்க நடவடிக்கை எடுப்பது ஆகும்.

## அதிக இல்ல நீர் பயன்பாடு

2025ஆம் ஆண்டில், பினாங்கின் மொத்த நீர் பயன்பாடு தினமும் 865 மில்லியன் லிட்டராக (MLD) பதிவாகியுள்ளது. இதில் 482 MLD (55.7%) வீட்டு உபயோகமாகும். மீதமுள்ள 383 MLD தொழிற்சாலைகள், ஹோட்டல்கள், வணிக வளாகங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட வீடு அல்லாத துறைகளால் பயன்படுத்தப்படுகிறது.

PBA
Perbadanan Bekalan Air
Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

2025ஆம் ஆண்டில் பினாங்கின் தனிநபர் உள்நாட்டு நீர் பயன்பாடு நாளொன்றுக்கு 267 லிட்டர் (LCD) ஆக பதிவாகியுள்ளது. அதேவேளையில், 2024ஆம் ஆண்டில் தேசிய சராசரி 225 LCD ஆகவும், சிங்கப்பூரில் 141 LCD ஆகவும் பதிவாகியுள்ளது.

பினாங்கு ஒரு நீர் பற்றாக்குறை மாநிலமாகவும், வெறும் 1,158 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பைக் கொண்டதாகவும் இருப்பதால், அதன் நீர் வளங்கள் இயற்கையாகவே வரையறுக்கப்பட்டவையாக உள்ளன.

**அதிக நீர் திட்டங்களைப் போலவே, குறைந்த நீர் பயன்பாடும் முக்கியமானது**

மத்திய அரசு, பினாங்கு மாநில அரசு மற்றும் PBAPP ஆகியவை எதிர்காலத்திற்கான நீர் விநியோக திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. PBAPP நீர் அவசரக்காலத் திட்டம் 2030 (WCP 2030)-இல் ரிம2.1 பில்லியன் முதலீடு செய்கிறது. மத்திய அரசு கூடுதலாக 5 கூட்டரசு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது, அவற்றின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரிம838 மில்லியன் ஆகும்.

பினாங்கில் இல்ல நீர் பயனீட்டாளர்கள் வீட்டில் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதும் அவசியமாகும்.

நீர் விநியோக மற்றும் பயன்பாடு (அல்லது தேவை) ஆகியவை உண்மையில் ஒரே எளிய சமமான இரண்டு கூறுகள் ஆகும். உரிமம் பெற்ற நீர் சேவை வழங்குநராக, பினாங்கிற்குத் தேவையான அளவு நீரை வழங்க PBAPP முயல்கிறது. அவசியமின்றி, PBAPP கூடுதலாக நீரை வழங்க முடியாது. மாறாக, குழாய்களில் நீர் வற்றிப் போகாமல் இருப்பதை உறுதி செய்வதே எங்கள் பணியாகும்.

பினாங்கில் நீர் பயன்பாடு 2016-ல் 827 MLD-யிலிருந்து 2025-ல் 865 MLD-ஆக அதிகரித்துள்ளது. மக்கள்தொகை மற்றும் விரைவான சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப, இது எதிர்காலத்திலும் தொடர்ந்து அதிகரிக்கும்.

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

**3 நல்ல காரணிகள்**

2026-ல் பினாங்கில் 'ஆக்ககர நீர் பயன்பாட்டை' மேற்கொள்வதற்கு 3 நல்ல காரணங்கள் உள்ளன:

1. பருவநிலை மாற்றம், பினாங்கின் ஆயிர் ஈத்தாம் மற்றும் தெலுக் பஹாங் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் (WCA), வறண்ட காலங்களில் சுங்கை மூடா ஆற்றில் நீரை வெளியேற்றும் மூடா அணை மற்றும் பெரிஸ் அணை ஆகியவற்றிலும் மழைப்பொழிவின் அளவு மற்றும் கால வரையறை பாதித்துள்ளது.

எல் நினோ தொடர்புடைய நீடித்த வெப்பமான மற்றும் வறண்ட பருவங்கள், நமது அணைகளின் மீதான அழுத்தத்தை அதிகரிக்கின்றன. உள்ளூர் உபயோகத்திற்கான நீர் பயன்பாட்டைக் குறைப்பது, இந்த அழுத்த அளவைக் குறைக்க உதவுகிறது.

எனவே, நீங்கள் வீட்டில் நீரைச் சேமித்தால், வானிலை வெப்பமாகவும் வறண்டதாகவும் இருக்கும்போதெல்லாம் நம் அனைவருக்கும் கவலை குறையும்.

2.இந்த 8 WCP 2030 திட்டங்களில் இரண்டு நிறைவடைந்துள்ளன. மேலும் 6 WCP 2030 திட்டங்கள் 2029-க்குள் நிறைவடையத் திட்டமிடப்பட்டுள்ளன. இதேபோல், 5 மத்திய அரசுத் திட்டங்களும் 2029-க்குள் நிறைவடைய திட்டமிடப்பட்டுள்ளன. இதற்கிடையில், Perak-Penang Water Project திட்டம் 2031 முதல் பேராக் மாநிலத்திலலிருந்து நீர் விநியோகத்தை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறைவான வீட்டு உபயோக நீர் பயன்பாடு, இந்தத் திட்டங்கள் அனைத்தும் செயல்பாட்டுக்கு வரும் வரை நமக்குப் போதுமான நீர் விநியோகம் இருப்பதை உறுதிசெய்ய (2026 முதல் 2029 வரை) கால அவகாசம் அளிக்கும்.

3.ஆக்ககர நீர் பயன்பாடு என்பது உங்கள் வீட்டு நீர் கட்டணத்தைக் குறைப்பதாகும். அதாவது, வீட்டில் நீரைச் சேமிப்பதன் மூலம் வீட்டுச் செலவுகளைக் குறைக்கிறது.

**ஆக்ககர நீர் பயன்பாட்டை எவ்வாறு அமல்படுத்துவது** :

ஆக்ககர நீர் பயன்பாட்டை அமல்படுத்துவது கடினமானதல்ல. நீங்கள் 3 எளிய பயிற்சிகளுடன் தொடங்கலாம்:

- குழாயில் நீரை வழிய விடாதீர்கள். உங்கள் குழந்தைகளுக்கும் அவ்வாறு செய்யக் கற்றுக் கொடுங்கள்.
- உங்கள் வாகனத்தைச் சுத்தம் செய்வதற்கும் அல்லது தோட்டத்திற்குத் நீர் பாய்ச்சுவதற்கும் குழாயைப் பயன்படுத்த வேண்டாம். அதற்குப் பதிலாக, உங்கள் வாகனத்தைச் சுத்தம் செய்ய ஒரு வாளி நீரும் ஈரத் துணியும் பயன்படுத்தவும்; உங்கள் செடிகளுக்குத் நீர் பாய்ச்ச நீர் ஊற்றும் குடுவையைப் பயன்படுத்தவும்.
- கசிவு ஏற்படும் அனைத்துக் குழாய்கள் மற்றும் கழிவறை நீர் வெளியேற்றும் அமைப்புகளை உடனடியாகச் சரிசெய்யவும்.

மேலும் நீர் சேமிப்பு குறிப்புகளுக்கு, www.pba.com.my அகப்பக்கத்தைப் பார்வையிடவும்.

நன்றி

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Section
மின்னஞ்சல் : comms@pba.com.my